# நாட்டின் 50 ஆண்டு நிறைவைக் கொண்டாட 50 நூல்கள்

சிங்கப்பூரின் 50 ஆம் ஆண்டு பொன்விழா கொண்டாட்டங்களை ஒட்டி, நாட்டின் வளர்ச்சியைக் குறிக்கும் 50 நூல்கள் அடுத்த ஆண்டில் வெளியிடப்படவிருக்கின்றன. 'சிங்கப்பூர் க்ரோனிகல்ஸ்' எனும் தொகுப்பில் இந்த நூல்கள் 50 வெவ்வேறு விதமான தலைப்புகளில் எழுதப்படவிருக்கின்றன.

அந்த 50 நூல்களைக் கொள்கை ஆய்வுக் கழகம் அடுத்த ஆண்டில் கட்டங் கட்டமாக வெளியிடும். ஒவ்வொரு நூலும் சுமார் 100 பக்கங்களைக் கொண்டிருக்கும். அவற்றை எழுத விருப்போர் அவரவர் துறையில் சிறந்து விளங்குபவர்கள்.

"சிங்கப்பூரை இப்போது இருக்கும் நிலைக்குக் கொண்டு வந்தவை எவை, வெற்றியை நோக்கி நாம் எடுத்த குறிப்பிட்ட சில வழிகள் என்ன போன்ற சுவாரஸ்யமான தலைப்புகளில் நூல்கள் அமையும்," என்று நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் விளக்கினார் கொள்கை ஆய்வுக் கழகத்தின் சிறப்பு ஆய்வு ஆலோசகர் திரு அருண் மகிழ்நன்.

இதுவரை 47 நூல்கள் உறுதி செய்யப்பட்டு விட்டன என்றும் சில நூல்களின் எழுத்துகள் தங்கள் கழகத்துக்கு வந்து விட்டன என்றும் திரு அருண் கூறினார்.

ஒவ்வொரு நூலிலும் அதன் தலைப்புத் தொட்டு, வரலாற்றுக் குறிப்புகள், முக்கியமான மைல்கல்லாக விளங்கிய நிகழ்வுகள், விவகாரங்கள் ஆகியவற்றுடன் எதிர்காலத்துக்குத் தேவையான படிப்பினைகள் போன்றவையும் இடம் பெற்றிருக்கும்.



சிங்கப்பூரின் 50 ஆண்டு கால வளர்ச்சியைக் குறிக்கும் வகையில் 50 நூல்களை எழுதவிருக்கும் சிலருள் (இடமிருந்து) 47 வயது திரு என். சிவசோதி, 67 வயது திருவாட்டி சில்வியா டான், 59 வயது திரு பீட்டர் ஹோ ஹாக் யான், 68 வயது பேராசிரியர் சுவா பெங் ஹுவாட், 59 வயது திரு பிலஹரி கௌசிகன் ஆகியோரும் அடங்குவர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

வெளியுறவு அமைச்சின் பொதுத் தூதரும் கொள்கை ஆலோசகருமான திரு பிலஹரி கௌசிகன், 1960களில் நாம் சந்தித்த 'கண்ஃபிராண்டாசி' காலம் முதல் இன்றைய காலம் வரைக்கும் உள்ள வேறுபாடு தொடர்பாக எழுதுவார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழக சமூகவியல் பேராசிரியர் சுவா பெங் ஹுவாட், பல கலாசார சமூகத்தைப் பற்றி தமது நூலில் எழுதுவார்.

பல்வேறு அமைச்சுகளின் நிரந்தரச் செயலாளராக இருந்த முன்னாள் அரசாங்க சேவை அதிகாரி திரு பீட்டர் ஹோ ஹாக் யான், அரசியல் சட்டம், ஆளுமை குறித்த விவகாரங்களை தமது நூலில் எடுத்துரைப்பார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழக உயிரியல் அறிவியல் துறையின் விரிவுரையாளர் திரு என். சிவசோதி, பறவைகளும் தாவரங்களும் எனும் தலைப்பில் நூலை வடிப்பார்.

புகழ்பெற்ற உணவு விமர்சகரான திருவாட்டி சில்வியா டான், சிங்கப்பூரின் புகழ்பெற்ற அக்காலம் முதல் இக்காலம் வரையிலான உணவுகள் பற்றிய சுவையான தகவல்களைத் தமது நூலில் குறிப்பிடுவார்.